පාර්ලිමේන්තුවේ විපක්ෂ නායක කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 290 වාර්තාව සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) ප්‍රකාරව ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලැබූ පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 290 அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் கௌரவ அமைச்சர் அவர்களின் அவதானிப்புகள் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

Office of the Leader of the Opposition of Parliament

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports of Parliamentary Series No. 290 tabled by the Committee on Public Accounts in terms of the Standing Order No. 119 (4).

படிவ இலக்கம் 01

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 290

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

இல	2021 நிதியாண்டுக்கான குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	அடையாளம் காணப்பட்ட / தற்போதைய நிலையின் குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
01.	உள்ளக கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியில் உள்ளகக் கணக்காய்வு பதவி இல்லாததால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இல்லை. ஆனால் எதிர்காலத்தில், உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02.	2020-08-28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் பகுதி 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756(6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	இந்த அறிக்கைகளை அனுப்புவதற்கு இற்றைவரைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
03.	அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	வாகனங்களில் தேசிய சின்னம் வரைவதற்கு எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்படும்
04.	2016-12-29 திகதியிட்ட 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விசேட செலவுகள் பிரிவுக்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படவில்லை.	அனைத்து வாகனனங்களிலும் எரிபொரு தகனம் பற்றிய சோதனைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன.
05.	நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
06.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு வருடத்துக்கு குறைந்த பட்சம் 2 கூட்டங்களையாவது நடத்தியிருக்கவில்லை	உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இல	2021 நிதியாண்டுக்கான குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	அடையாளம் காணப்பட்ட / தற்போதைய நிலையின் குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
07.	நிறுவனம் பற்றி மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக வெப்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்படவில்லை.	தற்பொழுது வெப்தளம் தயாரிக்கப்பட்டுள்ளது.
08.	நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வெப்தளம் மூலம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை	தற்பொழுது வெப்தளம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் கடிதங்கள் மூலம் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.
09.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	இதற்கடுத்த ஆண்டு அபிப்பிராயம் ஒப்புதலளிக்கக் கூடியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது ஒழுங்குமுறையாக சட்டபூர்வமாகியுள்ளது.
10.	மொத்த பணியாட் தொகுதியையும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை	இது தொடர்பில் பொருத்தமான நிருவாக ரீதியிலான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
11	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கவும் நிறுவனத்தின் சிரேஸ்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது சிரேஸ்ட அலுவலர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வருடாந்தம் மனிதவள அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படும்.
12	இனங்கண்ட நிலைபெருதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த செயலாற்றுகை இலக்குகள் மற்றும் நிலைபெருதகு நோக்கங்களை இனங்கண்டு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாச (பா.உ)
எதிர்க்கட்சித் தலைவர்
இலங்கைப் பாராளுமன்றம்
2024-01-12